DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No. C.C. 9 of 2020 PW: 3

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

| | |
|---|---|
| Name | : கார்த்திகேயன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11/10/2021.

தேதி..11.10.2021, **C.C. 9/2020,** அ.த.சா.3 கார்த்திகேயன் அவர்களின் முதல் விசாரணை..

நான் கீழ்பந்தி கிராமத்தலிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நானும் வெங்கடேசனும் வெளியே சென்று விட்டு வந்தோம். அப்போது எங்கள் ஊரில் போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்ன என்று கேட்டபோது அ.த.சா.1 ன் நகைகள் திருடு போனதாக சொன்னார்கள். என்னை இந்த வழக்கில் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டாகள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையெப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.4 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.த.சா.1 ன் மகன் எனது நண்பர் என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் இல்லாததினால் சம்பவத்தை குறித்து நேரடியாக எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் எங்கள் ஊரில் விசாரணை செய்ததற்க்காக என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். சம்பவம் நடந்தது என்பதற்க்குதான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்றுதான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். சம்பவம் குறித்து கேள்விப்பட்டும் கூட எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பார்வை மகஜரில் சம்பவயிடத்தில் வைத்து நான் கையொப்பம் போட்டேன். ஏற்கனவே எழுதியுள்ள தாளில் தான் நான் கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதில் என்ன எழுதியிருந்தது என்று முழுமையான விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அங்கும் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நகை கிடைத்து விட்டது என்று அ.த.சா.1 என்னிடம் சொன்னார். திருடு போன நகை 5வருடத்திற்கு முன்பு வாங்கிய பழைய நகை என்றால் சரிதான். இப்போது போலீசார் அவர்களிடம் புது நகையை கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். புள்ளி விவரத்திற்க்காக எதிரிகளின் மீது போலீசார் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அ.த.சா.1 க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.